117

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,

முன்-பள்ளி கல்விச் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம்

இரண்டாம் அரையாண்டு இறுதிப் பரீட்சை 2007

**ESC 1126/1137 –** சுற்றாடலை ஆராய்தலும் ஒருங்கிணைந்த அணுகு முறையும்

காலம்: இரண்டு(02) மணித்தியாலங்கள்

திகதி: 10.06.2007 நேரம்: மு.ப 10.00 - பி.ப 12.00

பகுதி **I** இல் இருந்து இரண்டு(02) வினாக்களுக்கும் பகுதி **II** இல் இருந்து இரண்டு(02) வினாக்களுக்குமாக மொத்தமாக நான்கு(04) வினாக்களுக்கு விடையளிக்க. இரு பகுதிகளையும் ஒன்றாக இணைக்குக.

## பகுதி I

1. (அ) முன்பள்ளிப் பிள்ளைகளின் பின்வரும் பண்புகள் அவர்கள் சுற்றாடலை ஆராய்வதற்கு எவ்வாறு உதவுகின்றன என பொருத்தமான உதாரணங்கள் தந்து விளக்குக.

   (i) ஆர்வம்(ஆவல்)
   (ii) இயங்கும் தன்மை (அசையும் தன்மை)

   (10 புள்ளிகள்)

   (ஆ) தனது சூழல் தொடர்பான தண்ணீர், மண், கல் ஆகிய பொருட்களில் இருந்து முன்பள்ளிப் பிள்ளை தனது சூழல் தொடர்பாக பெற்றுக் கொள்ளக்கூடிய கற்றல் அனுபவங்களை பரீட்சிக்க.

   (15 புள்ளிகள்)

2. (அ) மிருகங்கள் பற்றிய கற்றல் அனுபவங்களை முன்பள்ளிப் பிள்ளைகளுக்கு வழங்குவதற்காக அவர்களை ஈடுபடுத்தி ஒருங்கமைக்கக்கூடிய செயற்பாடுகள் இரண்டைச் சுருக்கமாகத் தருக.

   (05 புள்ளிகள்)

   (ஆ) மேலே நீங்கள் குறிப்பிட்ட செயற்பாடுகளில் முன்பள்ளிப் பிள்ளைகள் ஈடுபட செய்யும் முறையினை பின்வரும் தலைப்புக்களில் விளக்குக.

   (i) நோக்கங்கள்
   (ii) அணுகுமுறை(நீங்கள் எவ்வாறு செயற்பாட்டை ஆரம்பிப்பீர்கள்)
   (iii) வினாக்களும் எதிர்பார்க்கும் விடைகளும்
   (iv) முடிவு(செயற்பாட்டை எவ்வாறு நிறைவு செய்வீர்கள்)

   (20 புள்ளிகள்)

3. (அ) பிள்ளைகள் சுற்றாடலை ஆராய்வதற்கு உதவுவதற்காக முன்பள்ளித் தோட்டமொன்றை அமைக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய பிரதான அம்சங்களைத் தருக.

   (05 புள்ளிகள்)

   (ஆ) முன்பள்ளி பிள்ளை சுற்றாடலை ஆராய்வதற்கும் கற்பதற்கும் மேலுள்ள ஒவ்வொரு பிரதான அம்சத்தினதும் முக்கியத்துவத்தை விபரிக்க.

   (20 புள்ளிகள்)

## பகுதி II

4. (அ) "ஒன்றிணைந்த அணுகுமுறை" என்பதால் கருதப்படுவது யாது என விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) கிரமமான பாட-மைய கற்பித்தல் முறைக்கும் ஒன்றிணைந்த அணுகுமுறைக்கும் இடையிலான வேறுபாடுகளை விபரிக்க.

(15 புள்ளிகள்)

5. "எமக்கு உதவி புரிவோர்" என்பவர்களில் இருந்து ஏதாவதொரு பண்பைத் தெரிவு செய்க.

இப் பண்பை கருப்பொருளாகக் கொண்டு, ஒன்றிணைந்த அணுகுமுறையினைப் பயன்படுத்தி உமது முன்பாடசாலையில் செயற்பாடுகளைத் திட்டமிடும் முறையினை விளக்கப்படங்களுடன் விளக்குக.

(25 புள்ளிகள்)

6. (அ) செயற்பாடொன்றின் இறுதியில் முன்பள்ளிப் பிள்ளைகளை கணிப்பிடும் போது நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய பிள்ளை விருத்தி அம்சங்களைத் தருக.

(10 புள்ளிகள்)

(ஆ) உமது முன்பள்ளியில் ஒரு வார நிகழ்ச்சித்திட்டமாக "மழை" எனும் கருப் பொருளை தெரிவு செய்துள்ளீர்கள், இந் நிகழ்ச்சித்திட்டத்திற்கு நீங்கள் ஒன்றிணைந்த அணுகுமுறையைப் பயன்படுத்தவுள்ளீர்கள்.

இந் நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் மாணவரின் முன்னேற்றத்தை நீங்கள் கணிப்பீடு செய்யும் முறையினை பின்வரும் தலைப்புக்களில் உதாரணங்களுடன் விளக்குக.

- மொழி
- அழகியல் பாராட்டு
- சுற்றாடலைப் பற்றிக் கற்ற விடயங்கள்

(15 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)